# மனனப் பகுதி - தரம் 4

## திருவிவிலியப் பகுதி

1. அவர்கள் ஆண்டவரின் பெயரைப் போற்றுவார்களாக, அவரது பெயர் மட்டுமே உயர்ந்தது, அவரது மாட்சி விண்ணையும் மண்ணையும் கடந்தது. (தி.ப.148:13)

2. மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை, நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.(தி.ப.24:1)

3. ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்! பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது.(தி.ப.104:24)

4. அனைத்து உயிர்களே, ஆண்டவரைப் புகழ்ந்திடுக! அல்லேலூயா!(தி.ப.150:6)

5. ஆண்டவரே! எங்கள் தலைவரே! உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது! உமது மாட்சி வானங்களுக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது. (தி.ப.8:1)

6. அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்! (தி.ப.100:1)

7. அவரே அவற்றை என்றென்றும் நிலைபெறச் செய்தார், மாறாத நியமத்தை அவற்றிற்கு ஏற்படுத்தினார். (தி.ப.148:6)

8. இளைஞரே, கன்னியரே, முதியோரே மற்றும் சிறியோரே, நீங்கள் எல்லாரும் ஆண்டவரைப் போற்றுங்கள்.(தி.ப.148:12)

## திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை

9. விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன். பகுதி – (1)

10. அவருடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவையும் நம்புகிறேன். பகுதி – (2)